# செயலாற்றுகை அறிக்கை - 2014

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கங்கள் |
|---|---|---|
| 1. | தூர நோக்கு, செயற் பணிக்கூற்று மற்றும் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள், நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு | 2-4 |
| 2. | 2013 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை | |
| 2.1 | மேன் நோக்கு | 5 |
| 2.2 | சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்கான நிதியீட்டம் | 5-8 |
| 2.3 | நுந்நிதியீட்டம் | 8-11 |
| 2.4 | விவசாயத் துறைக்கான ஊக்குவிப்புக்கள் | 11-17 |
| 2.5 | உணவுப் பாதுகாப்பு | 18-21 |
| 2.6 | வரட்சி நிவாரணம் | 22-24 |
| 2.7 | விஷேட கடன் திட்டங்கள் | 25-27 |
| 3. | நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | |
| 3.1 | அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவியணி | 28 |
| 3.2 | பணியாளர்களின் தகவல்கள் | 29 |
| 3.3 | உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள் | 30-31 |
| 3.4 | வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள் | 32 |
| 4. | நிதி தொடர்பான தகவல்கள் | 33 |

## தூர நோக்கு

*“ பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள், வங்கியியல், மற்றும் நிதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கான வசதியளிக்கும் பிரதான அரச நிறுவனமொன்றாக மாறுதல். ”*

## பணிக்கூற்று

*“ சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள் துறை, வங்கியியல் துறை போன்றவற்றின் அபிவிருத்தி மற்றும், தொடர்புபட்ட நிறுவனங்களின் அவசியமான தலையீட்டினூடாக நிதிச்சந்தையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான நிதி வளங்களைத் திரட்டுவதற்கான பொருத்தமான கொள்கைகளையும் உபாயங்களையும் உருவாக்குதல். ”*

## திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- நிதித்துறை அபிவிருத்திக்கும், அரசாங்கத்தின் அனுசரணையில் வழங்கப்படும் நிதி உதவித் திட்டங்களுக்கும் பொருத்தமான கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் உபாயங்களையும் உருவாக்குதல்.


- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண் நிதித் துறைகளின் அபிவிருத்திக்கான பிரதான பிரச்சினைகளை இனங்காணலும், அவற்றிற்கான தீர்வுகளை வழங்குதலும்.

- வங்கியியல், காப்புறுதி, சிறிய, நடுத்தர மற்றும் நுண் அளவிலான தொழில் முயற்சிகள் போன்றவற்றிற்கான சட்டங்ளை உருவாக்குவதற்கான வசதிகளை அளித்தல்.

- வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளை எடுத்தல், கொள்கைகளை வசதிப்படுத்துவதற்கான ஆய்வுகளை நடாத்துதல்.

- காலத்துக்குக் காலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தோற்றம் பெறும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு




| | | |
|---|---|---|
| பிப | - | பிரதிப் பணிப்பாளர் |
| க | - | கணக்காளர் |
| உப | - | உதவிப் பணிப்பாளர் |
| ஆஉ | - | ஆராய்ச்சி உதவியாளர் |
| திஉ | - | திட்டமிடல் உதவியாளர் |
| தஉ | - | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் |
| முஉ | - | முகாமைத்துவ உதவியாளர் |
| சாரதி | - | சாரதி |
| காதொஉ | - | காரியாலய தொழில் உதவியாளர் |

<u>துறைகள்</u>

| | | |
|---|---|---|
| நிச, ஆபி | - | நிதிச் சந்தையும், ஆரம்பப் பிரிவும் |
| நுநி நி | - | நுண் நிதியும் நிருவாகமும் |
| சிநதொ | - | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் |
| அநி, மூச | - | அபிவிருத்தி நிதியும், மூலதனச் சந்தையும் |

# 2. அபிவிருத்தி நிதி 2014

## 2.1 மேன்நோக்கு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியான்மைகள் மற்றும் நுந்நிதித்துறையின் அநுகூலங்களை அறிந்து கொண்ட அரசு அத்துறைகளின் வளர்ச்சிக்காக கொள்கைகளையும் வியூகங்களையும் வகுத்து அதனூடாக சமநிலைப் பொருளாதார வளர்ச்சியையும் சமத்துவமான பிரதேச அபிவிருத்தியையும், தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்துவதினூடாக பலன்தரு திறனை அதிகரித்துள்ளது. பாரம்பரிய வங்கி நடைமுறைகளுக்கப்பால் சென்று வணிக வங்கிகளும், அபிவிருத்தி வங்கிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்குத் தேவையான நிதி வசதிகளையும் அறிவாற்றல் மற்றும் மேற்பார்வை வசதிகளையும் சிறப்பாக சந்தைப்படுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களையும் அடுத்த சிறந்த கைத்தொழிலாக மாற்றுவதனை நோக்காகக் கொண்டு வழங்கி வருகின்றன.

நுந்நிதி பிராந்திய மட்டத்தில் முயற்சியாண்மையாளர்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்குவதோடு அது ஒரு சில தன்னிகரற்ற தரங்களையும் கொண்டுள்ளது. மேலும் நுந்நிதித் துறையானது கடந்த சில தசாப்தங்களாக வியாபித்து கிராமிய அபிவிருத்தியில் பாரிய பங்களிப்புக்களையும் செய்து வருகின்றது. நுந்நிதித் துறையானது நகர்வாழ் குறை வருமானம் உடையோரினதும் முறை சாராததுறையினரினது சிறிய முயாற்சியாண்மைகளுக்கான நிதி உதவிகளையும் அவர்களுக்கு பாரம்பரிய வங்கி முறையோடு தொடர்புகள் இல்லாத சந்தர்ப்பத்திலும் கூட வழங்குகிறது.

அரசு தொடர்ந்தும் விவசாயத் துறைக்கான சலுகைகளை வழங்கி வருகிறது. அவற்றுள் பிரதானமாக உரமானியம், விதை நடு பொருள்களுக்கான மானியம், விவாசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், உணவுப் பாதுகாப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவுமாக விவசாயப் பொருட்களுக்கான உத்தரவாத விலைத்திட்டமும், நாடு பூராக விவாசாய உற்பத்திக்கான களஞ்சிய சாலைகள் அமைக்கும் திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

## 2.2 சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்கான நிதியீட்டம்

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளே ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதுகெழும்பாகக் காணப்படுவதனால் அரசு நிதி நிறுவனங்களை ஊக்கப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்கான நிதியீட்டத்தை அதிகரித்தும் அவற்றுக்கான ஆலோசனை சேவைகளை வழங்கியும் வருகிறது. 2014 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளை ஊக்குவிக்கும் பொருட்டு அரச மற்றும் தனியார் வங்கிகள் சுமார் 521,385 மில்லியன் ரூபாய்களைக் கடனுதவியாக வழங்கியுள்ளன. பாரம்பரிய வங்கி நடைமுறைகளுக்கு அப்பால் சென்று மேற்படி வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளுக்கான ஆலோசனைகளை வழங்கி அடுத்து நாட்டின் பிரதான துறையாக மிளிர்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.


**அட்டவணை 1 - சிறிய மற்றும் தொழில் முயற்சிகள் வங்கி நிலையங்கள் பற்றிய முன்னேற்றம் - 2014**

| வங்கி | விவசாயம் | | கைத்தொழில் | | சேவைகள் | | ஏனையவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன் (ரூபா. மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன் (ரூபா. மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன் (ரூபா. மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன் (ரூபா. மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன் (ரூபா. மில்) |
| இலங்கை வங்கி | 2,667 | 6,391 | 1,465 | 2,993 | 228 | 438 | 16,730 | 26,490 | 21,090 | 36,312 |
| மக்கள் வங்கி | 308 | 641 | 1,119 | 3,576 | 169 | 539 | 2 | 2 | 1,598 | 4,757 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | 834 | 552 | 1,015 | 773 | 1,120 | 859 | 613 | 421 | 3,582 | 2,605 |
| லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி | 73 | 128 | 93 | 367 | 3 | 3 | 10 | 30 | 179 | 528 |
| சனச அபிவிருத்தி வங்கி | 652 | 319 | 139 | 206 | 73 | 112 | 401 | 282 | 1,265 | 919 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 889 | 2,220 | 2,556 | 8,452 | 194 | 1,121 | 494 | 1,486 | 4,133 | 13,278 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **DFCC வங்கி** | 400 | 2,235 | 1,161 | 6,806 | 1,106 | 8,056 | 2,318 | 11,937 | 4,985 | 29,034 |
| **கொமர்ஷல் வங்கி** | 4,753 | 15,071 | 6,929 | 30,645 | 25,703 | 151,679 | 10,041 | 22,851 | 47,426 | 220,246 |
| **சம்பத் வங்கி** | 5,420 | 9,184 | 7,255 | 13,590 | 7,374 | 19,992 | 28,304 | 34,767 | 48,353 | 77,533 |
| **செலான் வங்கி** | 1,617 | 5,931 | 4,443 | 16,809 | 6,063 | 13,037 | 3,507 | 9,543 | 15,631 | 45,320 |
| **ஹற்றன் நெஷனல் வங்கி** | 4,054 | 6,981 | 2,417 | 11,562 | 6,439 | 26,401 | 1,150 | 2,472 | 14,060 | 47,415 |
| **நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி** | 275 | 2,015 | 673 | 2,221 | 2,240 | 8,594 | 9,445 | 15,011 | 12,633 | 27,840 |
| **யூனியன் பேன்க் ஒப் கெழும்பு லிமிட்ரட்** | 2,848 | 1,409 | 1,170 | 2,283 | 1,028 | 1,783 | 28,829 | 10,123 | 33,875 | 15,599 |
| மொத்தம் | **24,790** | **53,075** | **30,435** | **100,281** | **51,740** | **232,614** | **101,844** | **135,414** | **208,810** | **521,385** |

*மூலம்: உரிய வங்கிகள்*

2014 ஆம் ஆண்டு சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளுக்கு வணிக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் தொகைகளில் விவசாயத் துறைக்கு 12 வீதமும், கைத்தொழில் துறைக்கு 14 வீதமும், சேவைத்துறைக்கு 25 வீதமும் ஏனைய அனைத்து துறைகளுக்கும் 49 வீதமுமாக அமைந்திருந்தது.




### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரமுயற்சியாண்மைகளுக்கானவெளிநாட்டுமுதலீட்டுத் திட்டங்கள்

**சிறிய மற்றும் நடுத்தரமுயற்சியாண்மைஅபிவிருத்திவசதியளிப்புத் திட்டம் (SMEDeF)**

இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக உலக நிதி நெருக்கடியால் பாதிப்புக்குள்ளான இலங்கைக்கு நிதி பெறும் வழிகளை உறுதிப்படுத்துவதாகும். பாதிப்புக்குள்ளான சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்கு இரு துறைகளினூடாக நிதிஉதவிவழங்கப்படுகிறது. அவையாவன, நிதியீட்டமும்,நட்டஅச்ச பங்கீட்டுத் திட்டமும் (ஐ.அ.டொலர் 50.4 மில்லியன்) நியதிமற்றும் கொள்ளளவு அதிகரிப்புச் செய்தல்,சிறியமற்றும் நடுத்தர வங்கிகளுக்காக (ஐ.அ.டொலர் 7 மில்லியன்) இத்திட்டம் 2011 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு அது 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி மீளமைக்கப்பட்டது. இதற்கிணங்க 2014 ஆம் ஆண்டு மார்கழி 31 திகதியளவில் கருத்திட்ட அமுலாக்கல் குழு 5,902 மில்லியன் ரூபாபெறுமதியான 743 கடன்களுக்கு அனுமதிவழங்கியதுடன் இதில் 585 கருத்திட்டங்களுக்காக 4,255 மில்லியன் ரூபாய்களைக் கடனாக வழங்கியுள்ளது. இது மொத்த கடனளிப்புத் தொகையில் 72 சதவீதமாகும். அத்தோடு மொத்தக் கடன் தொகையில் 70 சதவீதத்தைப் பிரதிநிதிப்படுத்துவதாகும்.

**அட்டவணை 2 - 31.12.2014 ஆம் ஆண்டுவரையிலானமுன்னேற்றம்**

| ப.நி.நி | அனுமதிக்கப்பட்ட | | கடன் வழங்கல் | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கடன்கள் தொகை | தொகை (ரூ.மில்) | கடன்கள் தொகை | தொகை (ரூ.மில்) | கடன்கள் தொகை | தொகை (ரூ.மில்) | ஐஅ. டொ (மில்) |
| **இலங்கை வங்கி** | 135 | 1,001.01 | 95 | 579.07 | 62 | 421.94 | 3.22 |
| **கொமர்ஷல் வங்கி** | 85 | 598.20 | 83 | 552.20 | 3 | 46.00 | 0.35 |
| **DFCC வங்கி** | 27 | 368.05 | 26 | 363.70 | 1 | 4.35 | 0.03 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஹட்டன் தேசிய வங்கி** | 55 | 783.28 | 44 | 559.64 | 26 | 223.64 | 1.71 |
| **தேசிய அபிவிருத்தி வங்கி** | 32 | 503.93 | 31 | 482.43 | 2 | 21.50 | 0.16 |
| **மக்கள் வங்கி** | 133 | 973.99 | 99 | 545.97 | 53 | 428.02 | 3.27 |
| **பிரதேச அபிவிருத்தி வங்கி** | 183 | 743.75 | 120 | 386.58 | 74 | 357.17 | 2.73 |
| **சம்பத் வங்கி** | 93 | 929.90 | 87 | 786.09 | 17 | 143.81 | 1.10 |
| மொத்தம் | **743** | **5,902.10** | **585** | **4,255.67** | **238** | **1,646.43** | **12.56** |

*மூலம்: உரிய வங்கிகள்*

2014 ஆம் ஆண்டில் ஆகக் கூடுதலான கடன்கள் கிராமிய அபிவிருத்தி வங்கியினாலும் ஆகக் குறைந்த கடன்கள் கொமர்ஷல் வங்கியினாலும், தேசியஅபிவிருத்தி வங்கியினாலும் வழங்கப்பட்டுள்ளன. 2014 இல் ஆகக் கூடியதொகையை சம்பத் வங்கியும் அதாவது சுமார் 786 மில். ரூபாய்களையும் DFCC வங்கிஆகக் குறைந்ததொகையான 364 மில்லியன் ரூபாய்களையும் வழங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டு இறுதிவரை புவியியல் ரீதியாக வழங்கப்பட்ட கடன்களை நோக்கும் போது சுமார் 818 மில்லியன் ரூபாய்கள் கொழும்பு மாவட்டத்துக்கும், கம்பஹா 572 மில் ரூபா,குருநாகல் 465 மில். ரூபா, களுத்துறை 303 மில். ரூபா, காலி 296 மில். ரூபா மாத்தறை 240 மில் ரூபா, புத்தளம் 227 மில். ரூபா, கண்டி 221 மில். ரூபா என வியாபித்துச் செல்கிறது.

**அட்டவணை 3 - கருத்திட்டஅமுலாக்கல் குழுவினால் விடுவிக்கப்பட்டகடன் தொகை**

| வங்கி | 2014 ஆம் ஆண்டில் | | மொத்தகடன் தொகை 2014 டிசம்பர் 31ஆம் திகதிவரை | | |
|---|---|---|---|---|---|
| | கடன்கள் தொகை | ரூபா. மில். | கடன்கள் தொகை | ரூபா. மில். | ஐஅ. டொ |
| **இலங்கை வங்கி** | 40 | 140.04 | 95 | 579.07 | 4.42 |
| **கொமர்ஷல் வங்கி** | 5 | 48.00 | 83 | 552.20 | 4.21 |
| **DFCC வங்கி** | - | - | 26 | 363.70 | 2.78 |
| **ஹட்டன் தேசிய வங்கி** | 26 | 237.41 | 44 | 559.64 | 4.27 |
| **தேசிய அபிவிருத்தி வங்கி** | 12 | 147.00 | 31 | 482.43 | 3.68 |
| **மக்கள் வங்கி** | 44 | 222.73 | 99 | 545.97 | 4.17 |
| **பிரதேச அபிவிருத்தி வங்கி** | 46 | 141.12 | 120 | 386.58 | 2.95 |
| **சம்பத் வங்கி** | 38 | 367.39 | 87 | 786.09 | 6.00 |
| மொத்தம் | **211** | **1,303.70** | **585** | **4,255.67** | **32.47** |

*மூலம்: உரிய வங்கிகள்*

அடையாளங் காணப்பட்ட 23 முயற்சியாண்மை உப துறைகள் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை கடன் வசதிகளைப் பெற்றன. உணவகங்கள், தங்குமிடங்கள் மற்றும் உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் துறை ஆகக் கூடுதலான கடன்களையும் பெற்றுக் கொண்டன. அதாவது இத்துறையானது 934 மில்லியன் ரூபாய்களையும் அதற்கடுத்த படியாக விவசாய பதனிடல் துறைக்கு ரூபா 855 மில்லியன்களும், உற்பத்தி, சேவை, ஆடை, விவசாயம் மற்றும் கட்டடநிர்மாணத் துறைகளும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்களைக் காட்டி நிற்கின்றன.

**ஏற்றுமதித் துறையையும் நிலையான சக்திவளத் துறையையும் ஊக்குவித்தல்**

எமதுநாட்டில் நிலையான சக்திவளத் திறனை மேம்படுத்தவும் தனியார்துறையினரின் முதலீட்டை அதிகரிக்கவும் சிறியமற்றும் நடுத்தர முயற்சியாண்மைத் துறை உதவிவருகிறது. இதற்காக இலங்கைஅரசு ஐரோப்பிய அபிவிருத்த ிவங்கியுடன் ஒப்பந்தமொன்றையும் கைச்சாத்திட்டுள்ளது. இது 2013 ஆம் ஆண்டு 90 மில்லியன் யூரோக்களைப் (சுமார் 16,200 மில்லியன் ரூபா) பெற்றுக் கொள்வதற்காகக் கைச்சாத்திடப் பட்டது. இக்கடன் திட்டமானது சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையில் மீள் புதுப்பிக்கக் கூடியசக்தி வளம் (RE) மற்றும் சக்தி வளவினைத்திறன் (EE) துறைகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் வகையில் பொருளாதார

அபிவிருத்தியை முனைப்பாகக் கொண்டுஆரம்பிக்கப்பட்டது. இதன்படி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்குற்பட்ட புதுப்பிக்கக்கூடிய சக்திவளம் மற்றும் சக்திவள வினைத்திறன் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட கடன் தொகையானது முறையே 70 சதவிகிதமாகவும் (63 மில்லியன் யூரோ) காணப்பட்டது.

இக்கடன் முறையானது மூன்று பங்கேற்பு நிதிநிறுவனங்களின் (PFI) ஊடே வழங்கப்பட்டதோடு கொமர்ஷல் வங்கி, DFCC வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவையே அவையாகும். இத்துறையில் கடன் பெறவிரும்புவோர் தான் முதலீடுசெய்ய விருக்கும் துறையில் ஆகக் குறைந்தது 100,000 யூரோக்களையோ, ஆகக் கூடியது 25 மில்லியன் யூரோக்களையோ முதலீடு செய்ய முடியும்.

இத்துறையானது கடன் வழங்கலினூடாக நாட்டிற்கும், நாட்டின் சுற்றாடல் பாதுகாப்புக்கும் பங்களிப்புச் செய்வதோடு மீள் புதுப்பிக்கத்தகு சக்திவளங்களான காற்று, சூரியசக்தி,சிறு நீர் மின் உற்பத்திநிலையங்கள், உயிரியல் சக்தி மற்றும் அனல் மின் உற்பத்தி போன்ற துறைகளோடு தற்போது காணப்படும் மின் உற்பத்திநிலையங்கள் மீதும் கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது.மேலும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைத் துறைக்குக் கூடுதலான கவனம் செலுத்தி கடன்கள் புதிதாக ஆரம்பிக்கப்படும் வியாபாரத் துறைக்கும்,ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களை விரிவாக்கவும்,புனருத்தாபனம் செய்யவும்,நவீன மயப்படுத்தளுக்குமாகவும் வழங்கப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் 1,324 மில்லியன் ரூபா கடன் தொகையாக 30 கடன்கள் ஐரோப்பிய முதலீட்டு வங்கித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு ள்ளது.

## 2.3 நுந்நிதியீட்டம்

நுந்நிதியீட்டமானது கடந்த பல தசாப்தங்களாக அபிவிருத்தி அடைந்து கிராமியப் பொருளாதாரத் துறையில் பாரிய செல்வாக்குகளைச் செலுத்தியுள்ளது. நுந்நிதித் துறையானது நகர்ப்புறங்களில் வாழும் குறைந்த வருமானமுடையோரினதும் முறை சாராத் துறையினரது சிறிய முயற்சியாண்மைகளுக்கான நிதி உதவிகளையும் அவர்களுக்கு பாரம்பரிய வங்கி நடைமுறையோடு தொடர்புகள் இல்லாத சந்தர்ப்பத்திலும் கூட வழங்கி வருகிறது. தற்போது நுந்நிதித் துறையானது புதிய பரிமாணத்தோடு ‘‘நிதித்துறை உள்படுத்தல்’’ என்ற பெயரில் நான்கு துறைகளை உள்ளடக்கியதாக சேமிப்பு, கடன், நுந்நிதிக் காப்புறுதி மற்றும் பணப் பரிமாற்றமாக மிளிர்கிறது. ஒரு நாட்டின் நுந்நிதித் துறை பலராலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சுக்கள், வணிக வங்கிகள், சிறப்புத் தேர்ச்சி வங்கிகள், பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மற்றும் முறைசாராத வட்டிக் கடைக்காரர்கள், மிகவும் வறிய கிராமிய மட்டத்தில் வதிவோருக்கான நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பல அபிவிருத்தி முகவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவி செய்து வருகின்றன.

நாட்டில் கிராமப் புறங்களில் வதியும் குறை வருமானமுடைய குடும்பங்களுக்கும் பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்வோருக்கு வறுமை ஒழிப்புக்காகவும், நிதித்துறைக்கு உள்ளீர்ப்பதற்காகவும் முகவர்களினூடாக சலுகை அடிப்படையில் நிதியினை வழங்கி அரசு பிரதான நடிபங்கை ஆற்றி வருகிறது. 2014 ஆம் ஆண்டு குறை வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு பல்வேறு, அரசு தலைமையிலான நுந்நிதித் திட்டங்கள் அரசுடன் தொடர்புடைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. அவை வருமாறு.

**அட்டவணை 4 - பிரதான நுந்நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை - 2014**


| நுந்நிதி நிறுவனங்கள் | கிளைகளின் எண்ணிக்கை | வைப்பாளர்களின் எண்ணிக்கை | கடனாளிகளின் எண்ணிக்கை (ரூபா.மில்) | மொத்த வைப்பு (ரூபா.மில) | மொத்த முதலீடு (ரூபா.மில்) | மொத்த கடன் பெறுகை (ரூபா.மில்) |
|---|---|---|---|---|---|---|
| திவிநெகும திணைக்களம் | 1,074 | 9,104,024 | 6,618,730 | 54,479 | 48,308 | 128,026 |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 2,185 | 8,743,625 | 1,454,695 | 89,634 | 74,919 | 37,757 |
| கமநல அபிவிருத்தி திணைக்களம் | 532 | 272,023 | 483,250 | 328 | 2,213 | 5,826 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **பிரதேச அபிவிருத்தி வங்கி** | 265 | 5,228,002 | 466,106 | 72,544 | 25,807 | 25,881 |
| **லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி** | 8 | 40,244 | 7,677 | 354 | 5,490 | 2,768 |
| மொத்தம் | **4,064** | **23,387,918** | **9,030,458** | **217,339** | **156,737** | **200,258** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

அனைத்து நுந்நிதியளிப்பு நிறுவனங்களும் கடனாகவோ அல்லது சேமிப்பாகவோ வசதிகளை வழங்கி வருகின்றன. இதுவரை பிரதான நுந்நிதி நிறுவனங்களின் கடனளிப்பு நிலுவையாக 200 பில்லியன் ரூபாய்களாகக் காணப்படுவதோடு இது மொத்த கடனளிப்புத் தொகையில் 64 வீதமாகும். இதில் 128 பில்லியன் ரூபாய்கள் திவிநெகும திணைக்களத்தினூடாகவும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் 19 வீதத்தையும் (38 பில்லியன் ரூபா) பிரதேச அபிவிருத்தி வங்கி 13 வீதத்தையும் (26 பில்லியன் ரூபா) கமநல அபிவிருத்தித் திணைக்களம் 3 வீதத்தையும் (ரூபா 6 மில்லியன்) லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி எஞ்சிய 1 வீதத்தையும் (3 பில்லியன் ரூபா) கொண்டுள்ளன.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை வருமானம் குறைந்தோரது சேமிப்பு ரூபா 217 பில்லியனைத் தாண்டியுள்ளது என்பதனையும் 2014 ஆம் ஆண்டு நுந்நிதித் துறையின் முதலீடு ரூபா 156 பில்லியன் நீண்ட மற்றும் குறுகிய கால முதலீடுகளில் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளது என்பதனையும் காட்டுகிறது.





2014 ஆம் ஆண்டு நுந் நிதித்துறைக்கு வழங்கப்பட்ட கடன்தொகை ரூபா 106 பில்லியன்களாகக் காணப்பட்டது. இக்கடன் தொகையில் ரூபா 55 பில்லியன்கள் இலங்கை வங்கியினூடாக புதிய விரிவான கிராமிய கடன் திட்டத்தின் கீழும் (NCRCS) வறுமை ஒழிப்புக்கான நுந் நிதித் திட்டத்தின் (PAMP) கீழும், சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழுமே வழங்கப்பட்டன. இதேபோன்று சனச அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி போன்றனவும் சுமார் 31 பில்லியன் ரூபாய்களையும், 9 பில்லியன் ரூபாய்களையும் முறையே வழங்கி கடன் வழங்கலில் முக்கிய பங்கொன்றை 2014 ஆம் ஆண்டில் ஆற்றியுள்ளன. அரச வங்கிகளோடு ஒப்பிடுகையில் செலான் வங்கியும் ஹற்றன் நெஷனல் வங்கியும் தனியார் துறையின் வங்கிகளாக நுந் நிதித் துறைக்குபாரிய பங்காற்றியுள்ளதோடு அவ்வங்கிகளும் பல்வேறு கடன் திட்டத்தின் கீழ் நுந் நிதிக் கடன்களை வழங்கியுள்ளன.

### 2.3.1 “லிய இசுர” - சிறு வியாபார முயற்சிகளுக்கானதொரு கடன் திட்டம்


“லிய இசுர” என்பது 2014 ஆம் ஆண்டு அரசினால் ஆரம்பிக்கப்பட்ட பெண் முயற்சியாளர்களுக்கு பிணைகளின்றி இலாபமீட்டத் தகு வியாபாரங்களை அல்லது வியாபார முயற்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டதொரு கடன் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 250,000 ரூபா வரையிலான தொகை கடனாக

தற்போதைய வியாபாரத்தை மேலும் வியாபிப்பதற்கு அல்லது புதியதொரு வியாபாரத்தைத் தொடங்குவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கியினூடாக வழங்கப்பட்டது.

பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண் முயற்சியாளர்களுக்கு வெவ்வேறு வகையான தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக பிணைகளின்றி வயதுக் கட்டுப்பாடுகளின்றி வட்டியில்லாக் கடனாக இக்கடன் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்களவு பெண் முயற்சியாளர்கள் வெவ்வேறு வகையான தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக பிணைகளின்றி, வயதுக் கட்டுப்பாடுகளின்றி வட்டியில்லாக் கடனாக இக்கடன் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்களவு பெண் முயற்சியாளர்கள் சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்காக நிதிப்பற்றாக்குறை காரணமாக கஷ்டப் பட்டவர்களுக்கு பாரியதொரு நிவாரணமாக இத்திட்டம் அமைந்தது. 2014 ஆம் ஆண்டு ‘‘லிய இசுர’’ திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்கள் பற்றிய விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.




‘‘லிய இசுர’’ கடன் திட்டத்தின் பிரதான நோக்கமாக நாடளாவிய பெண் முயற்சியாளர்களுக்குக் கைகொடுப்பதாகக் காணப்பட்டதோடு இதனூடாக 2014 இல் 13,400 பெண் முயற்சியாளர்களுக்கு ரூபா 3,350 மில்லியன்களைக் கடனாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது. ஆயினும் உரிய இலக்கை எய்தும் பொருட்டு 2014 ஆம் ஆண்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு சுமார் 2316 மில்லியன்கள் 14,421 பெண் முயற்சியாளர்களுக்கு மத்தியில் கடனாக வழங்கப்பட்டது. காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு 3500 க்கும் மேற்பட்ட பெண் முயற்சியாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டு கடன் வழங்கப்பட்டது. இக்கடனூடாக வழங்கப்பட்ட நிதி புதிதாக தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் தற்போது காணப்படுகின்ற வியாபாரமொன்றை வியாபிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதோடு விவசாயம்,கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளைச் சார்ந்ததாக இவ் வியாபார முயற்சிகள் காணப்பட்டன.



2014 ஆம் ஆண்டில் மொத்தக் கடன் தொகையில் 60 வீதமான கடன் கைத்தொழில் துறைக்கே அதிலும் விஷேடமாக தைத்த ஆடைத்துறை மற்றும் குடிசைக் கைத்தொழில் துறைகளுக்கும் 21 வீதமான கடன் தொகை வர்த்தக மற்றும் சேவைத் துறைகளுக்குமே வழங்கப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக 13 வீதமான பெண்கள் விவசாயத் துறையிலும் 16 வீதமான பெண்கள் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலான தொழில் முயற்சியாளர்கள் குடிசைக் கைத்தொழில்களிலும் குடும்ப அங்கத்தவர்களின் உதவியினாலும் தனது வருவாயை அதிகரித்துக் கொள்வதோடு சுய தொழில் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

**கட்டம் 1 - அடகு நகைகளுக்கான விஷேட நிவாரணம்**

புதிய அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொண்டது. இது நாட்டின் பிரதான சவாலாகக் கருதப்பட்டு மக்கள் தங்களது பெற்றோரினாலும் உறவினர்களினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட நகைகளை வங்கிகளில் அடகு வைத்து அன்றாடத் தேவைகளுக்கு பணம் பெற்று வந்தனர். இந்நகைகளை உயர் வட்டி காரணமாகவும், பெற்ற பணத்தொகை நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாகவும் அவர்களால் உரிய காலத்தில் மீட்டிக்கொள்ள முடியாமல் போனது. இறுதியாக வறிய மக்கள் வேறு வழிகளில் உயர் வட்டிக்குக் கடன் பெற்று இவற்றை மீட்டிக்கொள்ள முயற்சித்ததனால் அவர்கள் கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டனர்.


மக்களின் துயரை அறிந்துகொண்ட புதிய அரசாங்கம் மக்களின் வாழ்வாதார இன்னல்களைக் கலைந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் அவர்களுக்கு விஷேட வட்டிச் சலுகையொன்று அரசு வழங்கியது.

இவ்வட்டிச் சலுகையின் படி,ரூபா 200,000 வரை நகை அடகு பிடித்தவர்களுக்கு அரச வங்கிகளில் இவ்வட்டிச் சலுகைகளை அநுபவிக்க முடியுமாயிருந்தது. இந்நிவாரணத்துக்காக அரசு சுமார் 7,000 ரூபாய் மில்லியன்களை ஒதுக்கீடு செய்தது. இந்நிதி ஒதுக்கீடு 2015 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு இதனூடாக சுமார் 100,000 பேருக்கு மேற்பட்டோர் பயனடைந்தனர்.

## 2.4 விவசாயத் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

### 2.4.1 உர மானியத் திட்டம்

விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு உர மானியத் திட்டம் அளப்பறிய சேவைகளைச் செய்து வருகிறது. விவசாயத் துறையின் இலக்குகளை எய்தப் பெறுவதற்கும் விவசாய உற்பத்திப் பொருட்களின் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கும் இலகுவாக விவசாய உள்ளீடுகளைப் பெறுவதற்கும் உர மானியம் பெரிதும் துணை புரிந்தது. 2005 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த உர மானியத் திட்டம் விவசாயிகள் எதிர்நோக்கிய உரத்துக்கான அதிக விலை கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலிருந்து அவர்களை விடுவித்தது. தற்போது அதிக விவசாயிகளைப் பெறுவதற்காகவும் மண் பாதுகாப்பை நோக்கமாகவும் கொண்டு நெற் பயிர்ச் செய்கைக்காகவும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காகவும் உர மானியம் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்ட நிதி 31,802 மில்லியன் ரூபாய்களாகும்.




### 2.4.1.1 நெல்லுக்கான உர மானியம்

நெல் உற்பத்தியில் பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணியாக உர மானியம் காணப்படுவதோடு மூன்று வகையான உரங்கள் நெல் உற்பத்திக்காக விநியோகிக்கப்படுகின்றன. அவை நேரடி உரமாக 2005 ஆம் ஆண்டிலிருந்து 50 கி.கி உறையொன்று ரூபா 350 க்கு விநியோகிக்கப்படுகிறது. அதன்படி யூரியா, TSP மற்றும் MOP ஆகிய உரவகைகள் கமநல நிலையங்களினூடாக இரு அரச உரக் கம்பனிகளினால் விநியோகிக்கப்படுகின்றன.

அரசினால் பொறுப்பேற்கப்படும் மானியத் தொகை 50 கி.கி கொண்ட உறையொன்றின் பெறுமதியில் சுமார் 88 வீதமாகக் காணப்படுகிறது.

வரைபு 6 - நெல்லுக்கான உர மானியம் - 2014




2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட வரட்சி நிலைமை நெல் உற்பத்தியை நேரடியாகப் பாதித்தது. வரட்சியினால் குறிப்பிடத்தக்களவு நெல் உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது நெல் வேளாண்மை செய்யப்பட்ட நிலப்பரப்பு, அறுவடை, உர விநியோகம் என்பவற்றிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

**ஆட்டவணை 5 - நெல் உற்பத்தி ஒப்பீடு 2013 - 2014**

| விபரம் | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உரத்தின் எண்ணிக்கை (மெ. தொ.) | விதைக்கப்பட்ட மொத்த விஸ்தீரணம் (ஹெக்ரேயர்) | அறுவடை செய்யப்பட்ட தேறிய விஸ்தீரணம் (ஹெக்ரேயர்) | நெல் உற்பத்தி (மெ. தோ.) |
|---|---|---|---|---|---|
| **2012/13 பெரும்** | 1,044,343 | 247,078 | 779,635 | 664,804 | 2,846,276 |
| **2013 சிறு** | 658,560 | 113,434 | 447,613 | 402,534 | 1,774,452 |
| 2013 மொத்தம் | **1,702,903** | **360,512** | **1,227,248** | **1,067,338** | **4,620,728** |
| **2013/14 பெரும்** | 941,792 | 186,846 | 651,289 | 520,608 | 2,235,851 |
| **2014 சிறு** | 538,048 | 92,518 | 312,979 | 272,339 | 1,144,929 |
| 2014 மொத்தம் | **1,479,840** | **279,364** | **964,268** | **792,947** | **3,380,780** |
| % குறைப்பு | **13** | **23** | **21** | **26** | **27** |


*மூலம் : விவசாய அபிவிருத்தி திணைக்களம், புள்ளிவிபரத் திணைக்களம்*

### 2.4.1.2 ஏனைய பயிர் வகைகளுக்கான உர மானியம்

விவசாயிகள் ஒரு பயிரிலிருந்து பல்வேறு பயிரினங்களை உற்பத்தி செய்யும் நிலையை வளர்ப்பதற்காகவும் பல்பயிர்க் கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்காகவும் நெல்லுக்கு மேலதிகமாக ஏனைய பயிர்களுக்காகவும் உர மானியம் வழங்கும் திட்டம் 2011 இல் பின்வரும் சலுகை விலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.


- 50 கி.கி ஐக் கொண்ட கலப்பற்ற உரப் பையொன்று 1,200 ரூபாய்க்கும்
- 50 கி.கி ஐக் கொண்ட கலப்பு உரப் பையொன்று 1,300 ரூபாய்க்கும் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

அரசினால் பொறுப்பேற்கும் மானியத் தொகை 50 கி.கிராம்களைக் கொண்ட கலப்பற்ற உரப்பையின் சந்தைப் பெறுமதியில் 31 வீதத்துக்கும் 77 வீதத்துக்கும் இடையில் காணப்படுகிறது.




இவ் உரமானியத் திட்டம் நுகர்வோருக்குத் தேவையான பல்வகை உரங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதோடு இலகுவாக அரச திணைக்களங்களிலும் தனியார் துறை நிறுவனங்களிலும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியது.

2014 ஆம் ஆண்டு சுமார் 407,439 மெ.தொன்களைக் கொண்ட உரங்கள் நெல் தவிர ஏனைய பயிரினங்களுக்காக விநியோகிக்கப்பட்டன.



### 2.4.2 புதிய விரிவான கிராமியக் கடன் திட்டம் (NCRCS)

புதிய விரிவான கிராமியக் கடன் திட்டம் (NCRCS) 2014 ஆம் ஆண்டினதும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டதோடு, இத்திட்டம் விவசாயத்துக்கான கடன் வசதிகளை வழங்கியதோடு கிராமிய விவசாய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பளித்தது. 2014 ஆம் ஆண்டில் மானிய வட்டி விகிதங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டதோடு உள்நாட்டு நிதிச்சந்தை பற்றியும் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி 2014 ஆம் ஆண்டில் அரசினால் பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வட்டித்தொகை 6 வீதத்திலிருந்து 5 வீதமாகக் குறைக்கப்பட்டதோடு விவசாயக் கடன்களுக்கான வட்டித்தொகை 9 வீதத்திலிருந்து 7 வீதம் வரை குறைக்கப்பட்டது.


**அட்டவணை 6 - NCRCS கடன் திட்டத்தினூடாக வழங்கப்பட்ட கடன்களின் விபரம் - 2014**

| பயிர் | ஏக்கரொன்றுக்கான உயர்ந்த பட்ச கடன் எல்லை (ரூபா) | உயர்ந்த பட்ச காணிக் கூறுகள் (ஏக்கர்) | வழங்கப் பட்ட கடன்களின் எண்ணிக்கை | விடுவிக்கப் பட்ட தொகை (ரூபா. மில்) | காணியின் விஸ்தீரணம் (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| **நெல் - மழை மூலமான நீர்ப்பாசனம்** | 30,000 | 10 | 53,343 | 3773 | 183,916 |
| | 32,000 | 10 | | | |
| **சோளம்** | 34,000 | 10 | 8,446 | 465 | 20,466 |
| **கிழங்கு** | 252,000 | 2 | 3,907 | 612 | 3,975 |
| **வெங்காயம்** | 140,000 | 2 | 12,518 | 1,448 | 19,575 |
| **செத்தல் மிளகாய்** | 88,000 | 2 | 3,141 | 177 | 4,744 |
| **மரக்கறிகள்** | 31,000 - 119,000 | 2 | 2,414 | 136 | 3,797 |
| **ஏனையவை - இஞ்சி** | 70,000 | 2 | 2,374 | 137 | 4,447 |
| மொத்தம் | | | **86,143** | **6,748** | **240,920** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*


கடன் வழங்களைப் பொறுத்தவரை ஏக்கருக்கான கடன் உச்ச எல்லையான 32,000 ரூபாவுக்குக் குறைவான தொகை கூடுதலாக நெல் விவசாயத்துக்கும் இது 2014 இல் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் 62 வீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மொத்த NCRCS கடன் வழங்களில் கிழங்கு மற்றும் சோளப் பயிர்ச்செய்கைக்காக 14 வீதமும் 10 வீதமுமாக முறையே வழங்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 240,921 ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கைக்காக முடக்கப்பட்டதோடு மேற்படித் தொகையில் 76 வீதம் நெல் வேளாண்மைக்காக கூடுதலான சலுகைக் கடன்களோடு நெல் உற்பத்தியில் தன்னிறைவு எய்தப் பெறுவதற்காக முடக்கப்பட்டது.

**வரைபு 9 - மாவட்ட ரீதியாக கடன் வழங்கப்பட்ட விபரம் - 2014**



2014 ஆம் ஆண்டில் ஆகக் கூடுதலான கடன் தொகையான ரூபா 1,256 மில்லியன்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவாகியள்ளது. இதனூடாக 8,627 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இலகுவாகக் கடன் பெறக்கூடிய நிலையும் அமைதியான சூழ்நிலையும் விவசாயிகள் அதிகளவில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியுள்ளன. அடுத்த படியாக அனுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கூடுதலான கடன்களைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 10 - பயிர் ரீதியாக கடன் வழங்கப்பட்ட விபரம் 2014**




பயிர்வகைகளைப் பொறுத்தவரை 2014 இல் வழங்கப்பட்ட கடன் தொகையில் கூடுதலான இடத்தைப் பெறுவதோடு இது மொத்த தொகையில் 62 வீதமாகவும் வெங்காயம், சோளம் என்பன அடுத்த இடங்களைப் பெறுவதோடு இவை இறக்குமதி பதிலீடாகவும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவவதற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.

**கட்டம் 2 - விவசாயக் கடன்களுக்கு ஒரு நிவாரணம்**

விவசாயிகளினால் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் காப்பதற்காக வழங்கப்படும் பங்களிப்பு அளப்பறியது. அவ்வாறிருந்தும் அண்மைக்காலமாக வெள்ளம், வரட்சி, பீடைகள், இயற்கை அழிவுகள் என்பவற்றிலிருந்து அவர்கள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கினர். இவ்வாறான தருணங்களில் பல விவசாயிகள் தாம் வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனது. இந்நிலைமையை அறிந்த அரசு 2015 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினூடாக வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களிலிருந்து 50 வீதத்தைக் கழித்து விடத் தீர்மானித்தது.

தனிப்பட்ட விவசாயிகள் நெல் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காகப் பெற்ற கடன்களிலிருந்து உச்ச எல்லையாக 100,000 ரூபா வரையும் கழிவு பெறுவதற்காகவும் செயற்படாத கணக்குகளாக மாற்றப்பட்ட கணக்குகளும் இச்சலுகைக்குத் தகுதி பெற்றன. இத்திட்டத்தின் படி விவசாயக் கடன்களிலிருந்து 50 வீதம் கழிக்கப்பட்டு அத்தொகை வங்கிகளுக்கு திறைசேரியினூடாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்திலிருந்து சுமார் 12,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

### 2.4.3 பயிர்க் காப்புறுதி

விவசாயிகளின் பயிர்களுக்கு வரட்சி, வெள்ளம், காட்டு யானைகள் என்பவற்றால் ஏற்படும் சேதங்களிலிருந்து நிவாரணம் வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு மேலும் சிறப்பானதும் பயனுறுதிவாய்ந்ததுமான சேவைகளை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டிலே ஒரு சில காலத்துக்குகந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திட்டம் விரிவாக்கப்பட்டு அமுல்படுத்தும் அதிகாரம் விவசாயக் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டு தேவையற்ற விதத்தில் ஏற்படும் கால தாமதங்களைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2014 ஆம் ஆண்டிலே சுமார் 795

ரூபா மில்லியன் சேகரிக்கப்பட்டு அதே விவசாயிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கு 365 மில்லியன் ரூபா 33,387 விவசாயிகளுக்கு பயிர் அழிவுக்கான நட்டயீடாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 2.4.4 விவசாயிகளுக்கான சமூகக் காப்புறுதி

2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டதற்கிணங்க அவ்வாண்டு முழுவதும் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் பாரிய நன்மைகளை விவசாயிகளுக்களித்தது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் 123,768 வயோதிப விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் 2,130 மில்லியன் ரூபாய்களை விவசாயிகள் ஓய்வூதியமாகப் பெற்றார்கள். விவசாயிகள் ஓய்வூதிய நிதி போதியளவு நிதித் துறைத் தன்னிறைவைக் கொண்டிராததனால் திறைசேரி 2014 இல் 180 மில்லியன் ரூபாய்களை அந் நிதியத்திற்கு வழங்கியது. தற்போது ஓய்வூதியம் பெறத் தகுதியான அனைத்து விவசாயிகளும் ஒவ்வொரு மாதமும் முதற் கிழமையிலேயே தனக்குரிய ஓய்வூதியத்தைத் தபாற் கந்தோர் ஊடாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

**அட்டவணை 7 - ஓய்வூதியம் வயதினடிப்படையில் வழங்கப்பட்ட விவரங்கள்**

| வயது குழு | மாதாந்த ஓய்வூதியம் (ரூபா.) | உரித்தான விவசாயிகள் தொகை | வழங்கப்பட்ட தொகை (ரூபா. மில்) |
|---|---|---|---|
| **60 - 63** | 1,000 | 18,832 | 163 |
| **64 - 70** | 1,250 | 73,018 | 1,095 |
| **71 - 77** | 2,000 | 28,981 | 696 |
| **78 இற்கு மேல்** | 5,000 | 2,937 | 176 |
| மொத்தம் | | **123,768** | **2,130** |

*மூலம்: விவசாய கமநலக் காப்புறுதிச் சபை*

### 2.4.5 சிறு தோட்டத் துறைக்கான உதவிகள்

நாட்டின் பொருளாதாரத் துறையை அபிவிருத்தி செய்யும் செயன் முறையில் அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் பிரதான துறையான நடிபங்கை சிறு தோட்டத்துறை வகிப்பதனால் முறையான முதலீடும், தொடர்ச்சியான வளர்ச்சியும் அத்துறைக்கு அவசியமாகிறது. கடந்த பல தசாப்தங்களாகவே சுதந்திரத்திற்குப் பிற்பட்ட அனைத்து அரசாங்கங்களும் சிறு தோட்டத் துறைக்கு ஊக்குவிப்புக்களை வழங்கியே வந்துள்ளன. இச் சிறு தோட்டத் துறையானது மொத்தத் தேசிய உற்பத்தியில் 1.9 வீத பங்களிப்பையும் மொத்த ஏற்றுமதியில் 17.5 வீத பங்கையும் வகிக்கிறது.

தற்போது சிறு தோட்டத் துறையானது சிறிய தோட்ட உரிமையாளர்களினால் வழி நடாத்தப்படுவதோடு 10 ஏக்கரிலும் குறையாத தேயிலை, இறப்பர் தோட்ட உரிமையாளர்களும் 5 ஏக்கருக்குக் குறையாத தென்னந் தோட்ட உரிமையாளர்களும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.மேலும் இச் சிறு தோட்டத்துறையானது தேயிலை உற்பத்தியில் 72 வீதத்தையும், இறப்பர் உற்பத்தியில் 65 வீதத்தையும், தெங்குற்பத்தியில் 82 வீதத்தையும் கொண்டுள்ளது.

**அட்டவணை 8 - சிறு தோட்டத் துறையின் வளர்ச்சி 2010 - 2014**

| ஆண்டு | தேயிலை | | இறப்பர் | | தெங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பு (ஹெக்டயர்) | மொத்த உற்பத்தி (மில்.கி.கி) | பரப்பு (ஹெக்டயர்) | மொத்த உற்பத்தி (மில்.கி.கி) | பரப்பு (ஹெக்டயர்) | மொத்த உற்பத்திகளின் (மில். தேங்காய்) |
| **2010** | 204,619 | 331 | 125,645 | 153 | 394,836 | 1,900 |
| **2011** | 206,104 | 328 | 128,120 | 158 | 394,836 | 2,303 |
| **2012** | 194,508 | 328 | 130,780 | 152 | 394,836 | 2,411 |
| **2013** | 194,508 | 340 | 133,668 | 130 | 394,836 | 2,061 |
| **2014** | 194,508 | 338 | 140,000 | 99 | 394,836 | 2,890 |

*மூலம்: பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை தேயிலைச் சபை*

சிறு தோட்டத்துறையை ஊக்குவிப்பதற்காக அரசு தேயிலை, இறப்பர் என்பவற்றின் மீள் நடுகைக்காகவும் வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் 2014 இல் அதிகரித்தது. அதன்படி தேயிலை மீள் நடுகைக்காகவும், புதிதாக நடுவதற்காகவும் ஒரு ஹெக்டயருக்கு முறையே ரூபா 500,000 வும் 400,000 ரூபாவுமாக மானியம் வழங்கப்பட்டது. மேலும் ஒரு ஹெக்டயருக்கு 175,000 ரூபாவும், 150,000 ரூபாவுமாக முறையே இறப்பர் மீள் நடுகைக்காகவும் புதிய நடுகைக்காகவும் மானியம் வழங்கப்பட்டது.

**கட்டம் 3 - இயற்கை இறப்பருக்கான உத்தரவாத விலை**

சிறுதோட்ட இறப்பர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக அரசு முன்வைத்த பிரேரணைக்கிணங்க 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் (RDD) ஒரு கிலோ இயற்கை இறப்பருக்காக ரூபா 300 உத்தரவாத விலையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து புகை இறப்பருக்காக மட்டும் (RSS 1,2,3,4,5) வழங்கப்பட்டு வந்த உத்தரவாத விலை லேடெக்ஸ் இறப்பருக்காகவும் இறப்பர் உற்பத்தியாளர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து அரசு வழங்கியது.

2015 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இவ்வுத்தரவாத விலையானது ரூபா 350 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டு இறப்பர் கைத்தொழிலின் நிலைபேறுடமையை உறுதிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

**அட்டவணை 9 - உத்தரவாத விலை மற்றும் மானியம்**

| வகுதி | உத்தரவாத விலை (கி.கி ஒன்றுக்கான விலை) | 2015.03.03 அன்று உள்நாட்டு சந்தை விலை (கி.கி.ஒன்றுக்கான விலை | செலுத்தப்பட விருக்கும் மானியம் (கி.கி. ஒன்றுக்கான விலை) |
|---|---|---|---|
| **RSS 1 மற்றும் RSS 2** | 350 | 210 | 140 |
| **RSS 3** | 325 | 200 | 125 |
| **RSS 4 மற்றும் RSS 5** | 300 | 190 | 110 |
| **இறப்பர் பால்** | 300 | 195 | 105 |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்*

அரசினால் சுமார் 690 மில்லியன் ரூபாய்களை மாதமொன்றுக்கு இத்திட்டத்துக்காக ஒதுக்கப் பட்டுள்ளதோடு இதுவரை 3,600 மில். ரூபாய்கள் 2015 ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**கட்டம் 4 - தேயிலைக் கொழுந்துக்கான உத்தரவாத விலை**


காலணித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே தேயிலை உற்பத்தித் துறை இலங்கைப் பொருளாதாரத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் வாழ்வாதார வளர்ச்சியை வழங்குவதிலும் பாரிய பங்களிப்பைச் செய்தது. அண்மைக் காலமாக தேயிலை விலை மிகவும் துரிதமாக குறைந்ததோடு மொத்த உற்பத்தியில் 72 வீதப் பங்களிப்பை வழங்கும். சிறு தோட்டத்துறை பாரிய இன்னலக்களுக்குள்ளானது. இவற்றை நன்குணர்ந்த அரசு 2015 ஆம் ஆண்டிலிருந்து தேயிலைக் கொழுந்துக்கான உத்தரவாத விலையை கிலோ ஒன்றுக்கு 80 ரூபாவாக அதிகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

இத்திட்டமானது இலங்கைத் தேயிலைச் சபையினூடாக அமுல் படுத்தப்பட்டதோடு 400,000 சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களும் சுமார் 712 தேயிலைத் தொழிற்சாலைகளும் இதனூடே நன்மையடைந்தன. இத்திட்டத்தின் கீழ் கொழும்பு தேயிலை ஏல விற்பனையின் விலைகளை மையமாகக் கொண்டு ரூபா 80 ஐ விடக் குறைவாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாக அந்த விலை வித்தியாசத்தை அரசு வழங்குகிறது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக தேயிலை உற்பத்தித் துறையின் வருமானம் சுமார் 9 பில்லியன் ரூபாய்களாகவும் உற்பத்தியின் அளவு சுமார் 30 மில்லியன் கிலோவாக அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மொத்தச் செலவினமாக 5,000 மில்லியன் 2015 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதோடு மாதாந்தம் சுமார் 700 மில்லியன் ரூபாய்கள் இதற்காக செலவு செய்யப்படுகிறது.

## 2.5 உணவுப் பாதுகாப்பு

### 2.5.1 நெல் கொள்வனவுத் திட்டம்

கடந்த ஆண்டுகளைப் போன்றே 2014 இலும் அரசு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதில் பாரிய பங்களிப்பைச் செய்து உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பிரதான பங்கை வகித்தது. 2013/2014 இல் நாட்டில் நிலவிய கடும் வரட்சி காரணமாக 2013/2014 பெரும் போகத்திலும் 2014 சிறு போகத்திலும் நெல் அறுவடையானது குறிப்பிடத்தக்களவு குறைந்ததோடு மொத்த நெல் உற்பத்தியானது 2014 ஆம் ஆண்டில் 3,380,780,000 மெ.தொ. களாகக் காணப்பட்டதோடு 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இத்தொகையானது சுமார் 27 வீத குறைவைக் காட்டி நிற்கிறது.




**அட்டவணை 10 - மொத்த நெல் கொள்வனவு நெல் சந்தைப்படுத்தும் சபை**

| காலம் | நாடு (மெ.தொ.) | சம்பா (மெ.தொ.) | மொத்தம் (மெ.தொ.) | பெறுமதி (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| **2009/10 பெரும்** | 63,850 | 6,919 | 70,769 | 1,995 |
| **2010 சிறு** | 83,819 | 27,910 | 111,729 | 3,184 |
| மொத்தம் | **147,669** | **34,829** | **182,498** | **5,179** |
| **2010/11 பெரும்** | 2,913 | 556 | 3,469 | 98 |
| **2011 சிறு** | 58,967 | 16,205 | 75,172 | 2,137 |
| மொத்தம் | **61,880** | **16,761** | **78,641** | **2,235** |
| **2011/12பெரும்** | 107,319 | 8,467 | 115,786 | 3,259 |
| **2012 சிறு** | 9,936 | 540 | 10,476 | 294 |
| மொத்தம் | **117,255** | **9,007** | **126,262** | **3,553** |
| **2012/13 பெரும்** | 107,445 | 31,205 | 138,650 | 4,530 |
| **2013 சிறு** | 81,834 | 12,542 | 94,376 | 3,058 |
| மொத்தம் | **189,279** | **43,747** | **233,026** | **7,588** |
| **2013/14 பெரும்** | 3,971 | 592 | 4,563 | 148 |
| **2014 சிறு** | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | **3,971** | **592** | **4,563** | **148** |
| முழு மொத்தம் | **520,054** | **104,936** | **624,990** | **18,703** |

*மூலம்: நெல் சந்தைப்படுத்தும் சபை*

இக்குறை உற்பத்தியானது தனியார் நெல் ஆலை உரிமையாளர்களிடையே நெல் கொள்வனவில் பாரியதொரு போட்டியை ஏற்படுத்தியதோடு இந்நிலைமையானது நெல்லுக்கான உத்தரவாத விலையினை விடக் கூடுதலான விலையை நெல் உற்பத்தியாளர்களான வுவசாயிகளுக்குப் பெற்றுக் கொள்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்தியது. இச்சந்தர்ப்பத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையானது 2014 ஆம் ஆண்டில் 4,563 மெ.தொ களைக் கொள்வனவு செய்தது.

அவ்வாறான போதிலும் மாவட்ட செயலகங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு ஆகியன 7,586 மெ.தொன்களை அரச நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்ததோடு அதற்காக ரூபா 263 மில்லியன்களையும் திறைசேரி நிதியிலிருந்து செலவு செய்துள்ளது

ஆயினும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா, முல்லைத் தீவு, மொனராகலை, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்கள், திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 263 மில்லியன் நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7,586 மெட்ரிக் தொன் அரிசியினைக் கொள்வனவு செய்துள்ளன. 2015 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளுக்கு அமைவாக, 2014/15 பெரும் போகத்திற்கான 200,000 மெட்ரிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. இந்நோக்கத்திற்காக ரூபா 9,900 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டு எப்பிரல் மாத இறுதியில், ரூபா 7,500 மில்லியன்களைப் பயன்படுத்துவதன் மூலம் 157,158 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2015 இல் திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவுத்திட்டப் பிரேரணையில் ஒரு கிலோ கிராம் கீரி சம்பா மற்றும் ஏனைய சம்பா அரிசி வகைகளுக்கான உத்தரவாத விலையாக ரூபா 50 உறுதிப்படுத்தப்பட்ட அதே வேளை, அனைத்து ஏனைய வகையான அரிசிகளுக்கும் ஒரு கிலோ கிராம் ரூபா 45 ஆக உத்தரவாதமளிக்கப்பட்டது.

நெல் கொள்வனவானது நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. நெல் சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியானது, திறைசேரி நிதி மற்றும் அரச வங்கிகள் ஆகிய இரண்டு மூலங்களிலிருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. 01.01.2008 - 31.12.2014 ஆம் திகதி வரை நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி நிதி மற்றும் அரச வங்கிகள் ஆகிய இரண்டு நிதி மூலங்களின் ஊடாகவும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விடுவிக்கப்பட்ட மொத்த நிதித்தொகை ரூபா 16,947 மில்லியனாகும். ஆயினும், வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் நிலுவையாகவுள்ள தொகை ரூபா 8,432 மில்லியன்களாக இருந்ததோடு, அது வழங்கப்பட்ட தொகையில் 49 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.நெல் சந்தைப்படுத்தும் சபையினால் 01.01.2008 - 31.12.2014 ஆம் திகதி வரை இந்நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த நெல்லிருப்பு 680,831 மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபையின் கையிருப்பில் நெல்லெதுவும் இல்லை.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் செலுத்த வேண்டியுள்ள மொத்தக் கடன் தொகையை உள்ளடக்குவதற்காக ரூபா 7,326 மில்லியன் பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்கள் 30.06.2013 ஆம் திகதி அரச வங்கிகளுக்கு (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி) வழங்கப்பட்டன.செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையான ரூபா 6,599 மில்லியன் தொகையை (முதல் மற்றும் வட்டி) உள்ளடக்குவதற்காக இவ்வுத்தரவாதங்களின் காலப்பிரிவு 31.12.2014 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. ஆயினும், 31.01.2015 ஆம் திகதியளவில் ரூபா 6,453 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது.

நெல் கொள்வனவானது 2006 ஆம் ஆண்டில் மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டது. நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 01.01.2006 - 31.12.2014 வரைதிறைசேரியினால் மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கு விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 4,413 மில்லியன்களாகும். 31.01.2015 ஆம் திகதியில் குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைகளின் (செலுத்த வேண்டிய) மொத்தத் தொகை ரூபா 485 மில்லியன்களாகும். இது வரை வழங்கப்பட்ட தொகையில்

இது அண்ணளவாக 11 சதவீதமாகும். ஆயினும், தற்போது,மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களிடம் நெல்லிருப்புக்கள் எதுவும் இல்லை.

31.02.2015 ஆம் திகதியில் மொத்தத் திறைசேரி நிதியில் மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கும் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கும் வழங்கப்பட்டு நிலுவையாகவுள்ள மீதி ரூபா 2,540 மில்லியன்களாகும். நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அரச வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா 6,540 மில்லியன்களாகும். அதன் பிரகாரம், 31.01.2015 அம் திகதியளவில் முழு அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 8,993 மில்லியனாகும்.

**அட்டவணை 11 - தனியார் துறையினரின் நெல் கொள்வனவுக்காக வழங்கப்பட்ட கடன்கள் - 2014**

| வங்கி | 2013/14 பெரும் | | 2014 சிறு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன்களின் எண்ணிக்கை (ரூபா.மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன்களின் எண்ணிக்கை (ரூபா.மில்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்த கடன்களின் எண்ணிக்கை (ரூபா.மில்) |
| **மக்கள் வங்கி** | 193 | 1,583 | 142 | 1,706 | 335 | 3,289 |
| **இலங்கை வங்கி** | 333 | 9,000 | 229 | 6,100 | 562 | 15,100 |
| **கி.அ.வங்கி** | 80 | 150 | 114 | 109 | 194 | 259 |
| அரச வங்கிகளுககான மொத்தம் | **606** | **10,733** | **485** | **7,806** | **1,091** | **18,648** |
| **கொமர்ஷியல் வங்கி** | 53 | 144 | 199 | 875 | 252 | 1,019 |
| **ஹற்றன் தேசிய வங்கி** | 221 | 1,732 | 161 | 1,230 | 382 | 2,962 |
| **செலான வங்கி** | 33 | 226 | 80 | 434 | 113 | 660 |
| **சம்பத் வங்கி** | 130 | 1,362 | 194 | 2,043 | 324 | 3,405 |
| **னுகுஊஊ வங்கி** | 13 | 75 | 17 | 207 | 30 | 282 |
| **தேசிய அபிவிருத்தி வங்கி** | 21 | 249 | - | - | 21 | 249 |
| தனியார் வங்கிகளின் எண்ணிக்கை | **471** | **3,788** | **651** | **4,789** | **1,122** | **8,577** |
| முழு மொத்தம் | **1,077** | **14,521** | **1,136** | **12,704** | **2,213** | **27,225** |

*மூலம்: உரிய வங்கிகள்*

வறட்சி நிலைமையின் காரணமாக நெல் அறுவடை மீது ஏற்பட்ட பாதிப்பினால் நெல் கொள்வனவில் ஏற்பட்ட அதிகரிப்பு 2013 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டில் அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் மொத்தமாக நெல் கொள்வனவிற்காக ரூபா 24,261 மில்லியன் வழங்கப்பட்டன. இது 2013 இல் வழங்கப்பட்ட தொகையான ரூபா 27,225 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சுமார் 19 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 2013 இலிருந்து 2014 வரை கடன்களின் எண்ணிக்கையானது 1.423 இலிருந்து 2,213 ஆக அதிகரித்துள்ளது.

### 2.5.2 விவசாயிகளுக்கான உத்தரவாத விலையை உறுதிப்படுத்தல்

உணவு உற்பத்தியில் தன்னிறைவை எய்தும் பொருட்டு அரசினால் பல்வேறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட்டதோடு விவசாயிகள் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஊக்குவிக்கப்பட்டனர். உணவு பயிர் வகைகளுக்கான உத்தரவாத விலையை உறுதிப்படுத்தியதோடு பயிர்க் காப்புறுதி, விவசாயிகள் ஒய்வூதியத் திட்டம் என்பனவும் உள்ளூர் விவசாயிகள் நன்மையடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் திட்டங்களில் பிரதான இடத்தை வகித்தன.

2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமைச்சரவையானது உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் போன்றவற்றுக்கு உத்தரவாத விலையாக முறையே ரூபா. 80/- ரூபா. 60/- ரூபா. 350/- என்ற அளவில் அங்கீகரித்தது. இதற்கு மேலதிகமாக விதை

உருளைக் கிழங்குக்கான உத்தரவாத விலை ரூபா. 160/- ஆகவும், விதை பெரியவெங்காயத்தின் விலை ரூபா. 12,000/- ஆகவும் விலை நிர்ணயம் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. இதன் பிரதான நோக்கமாக விதை வகைகளின் இருப்பை உறுதிப்படுத்துவதும் விவசாயிகள் இலாபத் தன்மையை உறுதிப்படுத்துவதுமாகவே காணப்பட்டது. மேலும் மேற்படி உத்தரவாத விலைக்கு அரசு லங்கா சதொச நிறுவனத்தினதும், மாவட்ட செயலாளர்களினதும் ஊடாக மேற்படி அரசின் முடிவை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் விவசாயிகளிடமிருந்து விவசாய உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அதற்கிணங்க இலங்கை சதொச நிறுவனமும், உரிய மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களும் கூட்டாக 6,352 மெ.தொன் உருளைக் கிழங்கும் 5,469 மெ.தொன் பெரிய வெங்காயமும் மொத்தமாக 1,069 ரூபா மில்லியன்கள் செலவில் 2014 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டன. உருளைக் கிழங்கு கொள்வனவில் நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்ட செயலாளர்களின் அரசாங்க அதிபர்களின் பங்களிப்பு அளப்பறியதாகக் காணப்பட்டது.

### 2.5.3 களஞ்சிய சாலை வசதிகள்

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விலை அதிகரிப்பு ஏற்படும் போது விற்பனை செய்வதற்கு வசதியாக உலக வங்கியின் உதவியுடன் அரசு புத்தாக்கச் செயன் முறையொன்றை உலர் வலயப் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தி தமது உற்பத்திப் பொருட்களைத் தரமான முறையில் களஞ்சியப் படுத்துவதற்காகவும் அவற்றை பிணையாக வைத்து வங்கிகளில் கடனுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நெல்,சோளம், சோயா அவரை போன்றவற்றுக்காக தரமான களஞ்சிய சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம், மன்னார், மொனராகலை போன்ற மாவட்டங்களில் மூன்று பல் நோக்குக் களஞ்சிய சாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. இவற்றுள் அநுராதபுரக் களஞ்சிய சாலை சுமார் 8,000 மெ.தொன் களஞ்சிய சாலை வசதிகளுடன் ஓயாமடுவவில் நிர்மாணிக்கப்பட்டது.

இவற்றுக்கு மேலதிகமாக 374 ஒப்பந்தங்கள் தனியாருடன் வீட்டை மையமாக வைத்துக் களஞ்சிய சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் அதிலும் விஷேடமாக பெரிய வெங்காய உற்பத்தியைக் களஞ்சியப்படுத்தும் நோக்கத்துடன் அநுராதபுரம், மாத்தளை, பொலநறுவை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இவ்வாறு பெரிய வெங்காயக் களஞ்சியப்படுத்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட களஞ்சியங்களில் சுமார் 3,980 மெ.தொன் பெரிய வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தக் கூடியதாகவுள்ளது. இவற்றுள் 1,685 மெ.தொன் களஞ்சிய வசதி மாத்தளை மாவட்டத்திலும் 1415 மெ.தொ அநுராதபுர மாவட்டத்திலும், 560 மெ. தொன் பொலநறுவை மாவட்டத்திலும், 320 மெ.தொ குருநாகல் மாவட்டத்திலும் களஞ்சியப் படுத்தக் கூடியதாகக் காணப்படுகின்றது. இவற்றுள் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 220 களஞ்சிய சாலைகளில் 2,275 மெ.தொன் களஞ்சியப் படுத்தக்கூடிய வகையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 2.5.4 அரிசி இறக்குமதி

நாட்டிலே அரிசித் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கவும் சந்தையிலே அரிசியின் விலையை ஸ்திரமாகப் பேணவும், நுகர்வோருக்கு சாதாரண விலையில் அரிசியைப் பெற்றுக் கொடுப்பதற்குமாக 2014 இல் அரிசி ஏற்றுமதிக்காக தனியார் துறை, பொதுத் துறை நிறுவனங்களை அரசு ஊக்கப்படுத்தியது. அதற்கிணங்க அரச வங்கிகளினூடாக கடன் வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக அரிசிக்கான இறக்குமதித் தீர்வை ஒரு கிலோவுக்காக ரூபா 39 இலிருந்து ரூபா 5/- வரை குறைக்கப்பட்டன. இத்திட்டம் 2014.01.01 இலிருந்து அமுலுக்கு வந்ததோடு 2014.08.01 இலிருந்து அது ஒரு ரூபா வரை மேலும் குறைக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் மொத்த அரிசி இறக்குமதி 599,718 மெ.தொன்களாகக் காணப்பட்டது. லங்கா சதொச நிறுவனம் 108,897 மெ. தொன்களை இறக்குமதி செய்தது. அரசிலிருந்து அரசுக்கு என்ற கொள்கைக்கிணங்க இலங்கை அரசுக்கும் வங்காள தேச அரசுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி 25,000 மெ.தொன் அரசி வங்காள தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவ்விறக்குமதி இலங்கை அரசின் சார்பில் லங்கா சதொச நிறுவனத்தினூடாக 2014 இல் 140,000 மெ.தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

## 2.6 வரட்சி நிவாரணம்

2014 ஆம் ஆண்டு ஜுலை மாதமளவில் இலங்கையில் எற்பட்ட பாரிய வரட்சி நிலைமையினால் ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் விவசாயத்துக்கான நீர்ப்பாசன வசதிகள் குறைவடைந்தமை காரணமாக விவசாயிகள் தமது வருமானத்தில் வீழ்ச்சியை எதிர் நோக்கினர். இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு நெல் வேளாண்மைக்கு ஏற்பட்ட அழிவுகளை நிவர்த்தி செய்யவும், ஏனைய சமூகப் பின்னடைவுகளை சமன் செய்யவுமாக ரூபா 1964.4 மில்லியன்கள் அரசினால் ஒதுக்கப்பட்டு "வரட்சியினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம்" என்றொரு நிகழ்ச்சித்திட்டம் நேரடியாக நிதி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது மிகவும் வெற்றிகரமாக 2014.07.21 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நாட்டின் 17 மாவட்டங்களில் வெவ்வேறு நான்கு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

### 2.6.1 தூர் வாருதலினூடாக குளங்களினதும் நீர்த் தேக்கங்களினதும் கொள்ளளவை அதிகரித்தல்

இத்திட்டத்தின் கீழ் வரட்சியால் பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களிலும் காணப்பட்ட குளங்கள், நீர்த் தேக்கங்கள் என்பவற்றில் காணப்பட்ட தூரை வாருதலினூடாக அவற்றின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட17 மாவட்டங்களிலும் காணப்பட்ட சுமார் 750 குளங்களும், நீர்த் தேக்கங்களும் 1,300 மில்லியன் செலவில் தூர் வாரப்பட்டன.

**அட்டவணை 12 - திட்டத்தின் மாவட்ட அடிப்படையிலான முன்னேற்றம்**

| மாவட்டம் | தூர் வாரப்பட்ட குளங்களின் எண்ணிக்கை | தூர் வாரப்பட்ட பரப்பளவு (ஏக்.அடி) | செலவு (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **அநுராதபுரம்** | 37 | 1,182.00 | 220.00 |
| **பொலநறுவை** | 42 | 204.70 | 31.09 |
| **ஹம்பாந்தோட்டை** | 85 | 769.00 | 56.12 |
| **புத்தளம்** | 27 | 86.40 | 14.08 |
| **வவுனியா** | 16 | 79.10 | 36.88 |
| **திருகோணமலை** | 45 | 10.00 | 11.85 |
| **அம்பாறை** | 17 | 200.10 | .. |
| **கண்டி** | 4 | 4,690.00 | 4.89 |
| **குருநாகல்** | 23 | 61.50 | 10.52 |
| **மன்னார்** | 15 | 55.12 | 56.84 |
| **முல்லைதீவு** | 9 | 18.43 | 19.30 |
| **மட்டக்களப்பு** | 17 | 3.55 | 24.22 |
| **மொனராகலை** | 21 | 517.00 | 45.68 |
| **யாழ்ப்பாணம்** | 52 | .. | .. |
| மொத்தம் | **410** | **7,876.90** | **531.47** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம், மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வை திணைக்களம்*

### 2.6.2 குடிநீர் பெறுகை அதிகரிப்பு

இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு துப்பரவான குடிநீர் பெறுகையை ஊக்குவிப்பதே காணப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 42.4 மில்லியன் ரூபா செலவில் 97 பவ்சர்கள் ஊடாகக் குடிநீர் வழங்கப்பட்டன.

**அட்டவணை 13 - குடிநீர் விநியோகத் திட்ட முன்னேற்றம்**

| மாவட்டம் | வேலையின் தன்மை | செலவு (ரூபா.மில்) |
|---|---|---|
| **அநுராதபுரம்** | 18 பவ்சர்கள் ஊடாக நீர் வழங்கப்பட்டது. | 3.14 |
| **பொலநறுவை** | 46 பவ்சர்கள் ஊடாக நீர் வழங்கப்பட்டது. | 23.05 |
| **மன்னார்** | 305 நீர்த் தொடர்புகள் நிர்மாணிக்கப்பட்டன. | 2.50 |
| **வவுனியா** | நீர் விநியோகமும் குழாய் நீர் விநியோகமும் | 11.27 |
| **அம்பாறை** | 3 பவ்சர்கள் ஊடாக நீர் வழங்கப்பட்டது. | 0.15 |
| **மொனராகலை** | 27 பவ்சர்கள் ஊடாக நீர் வழங்கப்பட்டது. | 2.29 |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம், மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களம்*

### 2.6.3 விவசாயக் கிணறுகளின் புனர் நிர்மாணம்

விவசாயிகள் தமது விவசாயத்துக்கான நீரைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழியான விவசாயக் கிணறுகள் காணப்படுவதோடு அவற்றை மீள் நிருமாணம் செய்யும் வேலைத்திட்டமொன்று குறிப்பாக அநுராதபுரம், பொலநறுவை, மன்னார், வவுனியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டத்துக்காக சுமார் 37.02 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு சுமார் 675 விவசாயக் கிணறுகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டன.

**அட்டவணை 14 - விவசாயக் கிணறுகள் புனர் நிர்மாண முன்னேற்றம்**

| மாவட்டம் | புனர் நிர்மாணம் செய்யப்பட்ட விவசாய கிணறுகள் | செலவு (ரூபா.மில்) |
|---|---|---|
| **அநுராதபுரம்** | 137 | 2.02 |
| **பொலநறுவை** | 7 | 3.21 |
| **மாத்தளை** | 168 | 6.42 |
| **மன்னார்** | 96 | 17 |
| **மொனராகலை** | 2 | 0.41 |
| **வவுனியா** | 49 | 1.11 |
| **முல்லைதீவு** | 216 | 6.85 |
| மொத்தம் | **675** | **37.02** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம், மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களம்*

### 2.6.4 ”காசுக்கு வேலை“ பாதிக்கப்பட்டோருக்கான வருமான ஊக்குவிப்பு

கிராமிய சமூகத்தை மையமாக வைத்து அவர்களின் பங்களிப்புடன் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், கிராமியப் பாதைகள் போன்றவற்றை மறுசீரமைக்கும் பணி இத்திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்பட்டது. இத்திட்டத்துக்குச் சமாந்தரமாக வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறுகிய கால வருமான வாய்ப்புக்களை வழங்குவது பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. வரட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு இந் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஆகக் கூடுதலாக 6,000 ரூபா மாதமொன்றுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது.

**அட்டவணை 15 -”காசுக்காக வேலை” திட்டத்தின் முன்னேற்றம்**

| மாவட்டம் | அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் | பயனாளிகள் தொகை | செலவு (ரூபா. மில்) |
|---|---|---|---|
| **அநுராதபுரம்** | 129 | 68,770 | 48.96 |
| **பொலநறுவை** | 325 | 77,084 | 45.42 |
| **புத்தளம்** | 40 | 3,411 | 4.79 |
| **குருநாகல்** | .. | .. | 18.39 |
| **முல்லைதீவு** | 270 | 4,994 | 29.15 |
| **ஹம்பாந்தோட்டை** | 346 | 60,937 | 186.89 |
| **வவுனியா** | 109 | 3,455 | 14.62 |

| | | | |
|---|---|---|---|
| **திருகோணமலை** | 31 | 5,100 | 6.20 |
| **அம்பாறை** | 298 | 14,558 | 24.00 |
| **மொனராகலை** | 118 | 5,012 | 15.34 |
| **மட்டக்களப்பு** | 13 | 2,720 | 8.60 |
| மொத்தம் | **1,679** | **246,041** | **402.36** |

*மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம், மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களம்*

### 2.6.5 விதை நெல் வழங்கும் திட்டம்

பெரும்பாலான சிறிய அளவிலான விவசாயிகள் வரட்சி காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளானதால் பெரும்பாலான மாவட்டங்களில் விவசாயிகளுக்கான விதை நெல் இலவசமாக வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டது. இது 2014 /2015 பெரும் போகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்துக்காக 2014 இல் 2,985 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான விதை நெல் 18 மாவட்டங்களில் வதியும் உர மானியம் பெறும் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டன. இதன் மூலம் அவர்கள் 1,136,438 ஏக்கர்களில் நெல் வேளாண்மையை மேற்கொண்டார்கள். இவ் வேலைத் திட்டத்தினூடாக 609,145 விவசாயிகள் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை 16 - இலவச விதை நெல்லுக்கான நிதி ஒதுக்கீடு**

| மாவட்டம் | செலவு (ரூபா.) | பயிர் செய்யப்பட்ட பரப்பு (ஏக்கர்) | பயனாளிகள் தொகை |
|---|---|---|---|
| **அநுராதபுரம்** | 550,086,714.00 | 196,682.00 | 155,160 |
| **பொலநறுவை** | 456,192,490.00 | 164,751.04 | 63,377 |
| **அம்பாறை** | 297,795,800.00 | 106,355.65 | 50,870 |
| **அநுராதபுரம்** | 255,941,660.00 | 91,408.00 | 49,773 |
| **திருகோணமலை** | 254,808,812.00 | 91,003.14 | 39,312 |
| **கிளிநொச்சி** | 50,000,000.00 | 67,984.50 | 32,245 |
| **ஹம்பாந்தோட்டை** | 181,394,227.25 | 67,574.33 | 33,354 |
| **மட்டக்களப்பு** | 143,240,420.00 | 57,772.35 | 22,454 |
| **வவுனியா** | 140,161,000.00 | 51,172.25 | 16,533 |
| **மன்னார்** | 120,423,500.00 | 43,008.60 | 14,622 |
| **புத்தளம்** | 112,448,514.50 | 40,160.14 | 21,944 |
| **மொனராகலை** | 96,649,800.00 | 34,830.22 | 22,560 |
| **மாத்தளை** | 73,205,316.68 | 26,144.76 | 28,518 |
| **முல்லைதீவு** | 70,405,300.00 | 32,329.25 | 10,424 |
| **கண்டி** | 65,115,084.50 | 23,457.20 | 23,651 |
| **யாழ்ப்பாணம்** | 62,663,916.57 | 22,379.97 | 15,175 |
| **பதுளை** | 49,965,100.00 | 17,844.67 | 7,999 |
| **இரத்தினபுரி** | 4,440,887.50 | 1,580.00 | 1,174 |
| மொத்தம் | **2,984,938,543.00** | **1,136,438.07** | **609,145** |

*மூலம்: மாவட்ட செயலகங்கள்*

## 2.7 விஷேட கடன் திட்டங்கள்

### 2.7.1 சுயதொழில் கடன் திட்டங்கள் - சமூக மீள் ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்காக

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி பெறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்காக சுய தொழில் வாய்ப்புக் கடன் திட்டமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் அவ்வாறானோரது பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் வருமான வழிகளைத் திறந்து விடுவதற்காகவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மீண்டும் சிறந்த பிரஜைகளாக அமைதியான சூழலில் வாழ்வதற்காகவும் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புனருத்தாபனம் செய்யப்பட்ட இளைஞர்கள் சுய தொழில் மேற்கொள்வதற்காகத் தேவையான இயந்திராதிகளைக் கொள்வனவு செய்வதற்காக விவசாயம், பால் உற்பத்தி, கால் நடை வளர்ப்பு, விவசாய விரிவாக்கம், கைத்தொழில், மீன்பிடி, சிறிய வியாபார முயற்சிகள் மற்றும் ஆரம்ப, இரண்டாந் தர, உயர் கல்வி, தொழிற் பயிற்சி போன்றவற்றுக்காக ஆகக்கூடிய தொகையாக 250,000 ரூபா வரைக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

இக்கடன் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு முற்தரப்புகளுக்கிடையிலான ஒப்பந்தமொன்று தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சு, ஆட்களின் புனருத்தாபனம், சொத்துக்கள், மற்றும் கைத்தொழில் அதிகார சபை (REPPIA) மற்றும் அரச வங்கிகளுக்கிடையில் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி) ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக திறைசேரி 300 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கு கடன் வசதிகளை உரிய பயனாளிகளுக்கு வழங்கியது. இக்கடன் திட்டத்துக்கான வட்டியாக வருடாந்தம் 12 வீதம் அறவிடப்பட்டது. இத்தொகையில் கடன் பெறுபவர் 4 வீதத்தையும் அரசு 8 வீதத்தையும் பகிர்ந்து கொண்டனர். இக்கடன் தொகை திருப்பிச் செலுத்தும் காலம் 10 வருடங்களாக வழங்கப்பட்டது. இதில் முதல் வருடம் கருணைக் காலமாக வழங்கப்பட்டது. இதுபற்றிய விபரங்கள் பின்வருமாறு 2015.02.28 வரை அமைந்திருக்கிறது.

ஆரம்பக் கட்டமாக விழிப்புணர்வுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதோடு நேர் காணல்களினூடாக பின்வரும் அங்கத்தவர்கள் பங்கு பற்றும் படியான தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

1. பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஒரு அலுவலர்
2. வங்கி முகாமையாளர் அல்லது ஒரு வங்கி அலுவலர்
3. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் அலுவலரொருவர்
4. புனர்வாழ்வு அதிகார சபையின் அலுவலரொருவர்

சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான கடன் திட்ட முன்னேற்றம் 2015.02.28 வரை

**அட்டவணை 17 - சமூக ரீதியாக மீள ஒன்றிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான கடன் திட்ட முன்னேற்றம் 28.02.2015**

| மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட கடனாளிகள் தொகை | வழங்கப்பட்ட கடன் (ரூபா) | 2014.06.31 வரை செலுத்தப்பட்ட வட்டி மானியம் ரூபா. |
|---|---|---|---|
| **யாழ்ப்பாணம்** | 288 | 48,336,000 | 5,649,096 |
| **கிளிநொச்சி** | 342 | 51,984,000 | 5,624,980 |
| **முல்லைதீவு** | 430 | 78,310,000 | 6,756,977 |
| **வவுனியா** | 307 | 47,075,000 | 5,410,252 |
| **மன்னார்** | 270 | 48,700,000 | 6,047,028 |
| **மட்டக்களப்பு** | 74 | 11,075,000 | 513,610 |
| **திருகோணமலை** | 72 | 14,250,000 | 778,906 |

| | | | |
|---|---|---|---|
| **அம்பாறை** | 10 | 1,650,000 | 139,752 |
| **ஏனையவை** | 5 | 1,150,000 | 59,403 |
| மொத்தம் | **1,798** | **302,530,000** | **30,980,004** |

*மூலம்: புனருத்தாபன அதிகார சபை*

கடனளிப்பை பொறுத்தவரை 2015 இல் 1,798 பேர் கடனைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்களுள் பெரும்பாலோனோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்தோராகக் காணப்பட்டனர். முல்லைதீவு மாவட்டத்தில் ஆகக் கூடுதலான கடனாளிகளாக 430 பயிலுனர்கள் காணப்பட்டனர். 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை அரசு 31 மில்லியன் ரூபாய்களை பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கான வட்டி மானியமாக செலுத்தியுள்ளது. 2014 ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் அமுல்படுத்தப் படுவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியது. இதில் சுமார் 4,724 பயனாளிகள் பயனடைந்தனர்.

### 2.7.2 சிரேஷ்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் பத்திரிகையாளர்களுக்கான விஷேட வாகனக் கடன் திட்டம்

25 வருடங்களாக இந்நாட்டின் சிரேஷ்ட கலைஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் மற்றும் பத்திரிகையாளர்களாகவும் மிளிருபவர்களுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் விஷேட வாகனக் கடன் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறான வர்களுக்கு ஆகக் கூடிய கடன் தொகையான 1.2 மில்லியன் ரூபாய்களை ஏழு வருடங்களில் திருப்பிச் செலுத்தக் கூடிய வகையில் தொடர்பு சாதன அமைச்சு மற்றும் கலாசார கலைகள் அமைச்சின் ஊடாகவும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டது. இத்திட்டத்துக்கான முழுமையான வட்டி அரசினால் வழங்கப்பட்டதோடு வட்டி மானியம் அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் இலக்குப் பயனாளிகள் தொகையாக முறையே 150 உம் 1000 ம் காணப்பட்டது. 2014.12.31 வரையிலான கடன் திட்டத்தின் முன்னேற்றம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 18 - சிரேஷ்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் பத்திரிகையாளருக்கான கடன் திட்ட முன்னேற்றம் - 2014.12.31 வரை**

| நிறுவனம் | அனுமதிக்கப் பட்ட கடன் தொகை | வழங்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | வட்டி மானியத் தொகை (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **பொதுசனத் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு** | 500 | 573.2 | 30.4 |
| **கலாச்சார விவகாரமற்றும் கலைத்துறை அமைச்சு** | 615 | 710.6 | 54.9 |
| மொத்தம் | **1,115** | **1,283.8** | **85.3** |

*மூலம்: பொதுசனத் தொடர்பாடல் மற்றும் தகவல், கலாச்சார விவகாரமற்றும் கலைத்துறை அமைச்சு*

பொதுசனத் தொடர்பாடல் மற்றும் தகவல் துறை அமைச்சும், கலாச்சார விவகாரமற்றும் கலைத்துறை அமைச்சு இத்திட்டத்தின் போது பிரதான பங்கை வகித்ததோடு தகுதியான விண்ணப்பதாரர்களைச் சிபாரிசு செய்தன. அதற்கிணங்க ரூபா 1,284 மில்லியன்களைக் கடன் வசதியாகக் கொடுத்ததோடு 2014 இல் 1,115 பேர் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடன்களை வழங்கியது. இதேகாலப் பகுதியில் திறைசேரியானது 85.3 மில்லியன்களை வட்டி மானியமாக உரிய வங்கிகளுக்கு வழங்கியுள்ளது.

**கட்டம் 5 - சிரேஷ்ட பிரஜைகளுக்கான விஷேட வட்டி வீதங்கள்**

கடந்த காலங்கிகளில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த சிரேஷ்ட பிரஜைகளுக்கு நன்மை பயக்கும் வகையில் அரசு 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்களுக்காக உயர்ந்த வட்டி வீதங்களை வழங்குவதற்க அரசு தீர்மானித்தது. முன்னைய அரசு 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அதி உயர் வட்டி வீதமான 12 சதவீத வட்டி வீதத்தை வழங்கியது. இதனூடாக சுமார் 500,000 சிரேஷ்ட பிரஜைகள் நன்மையடைந்தனர்.

மேலும் 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய அரசு தனது இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினூடாக 15 சதவீதமாக அதிகரித்தது. அதன் படி சிரேஷ்ட பிரஜைகள் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வைப்புச் செய்துள்ள ஒரு மில்லியன் வரையிலான சேமிப்புக்களுக்கு இவ்வட்டித் தொகை வழங்கப்படவுள்ளது. சாதாரண வட்டி வீதத்திற்கு மேலதிகமாக வணிக வங்கிகளினால் வழங்கப்பட்ட வட்டித் தொகை குறிப்பிட்ட வங்கிகளுக்கு திறைசேரியினால் காலாண்டு அடிப்படையில் வழங்கப்படும். இதற்காக அரசு 2015 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 4,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

## 3. நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

### 3.1 பணியாளர் தொகுதி

| பதவிகள் | | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | தற்போது இருக்கும் பதவிகள் |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 00 |
| 03 | பணிப்பாளர் | 04 | 04 |
| 03 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 04 | 03 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - கணக்காளர் | 01 | 01 |
| 05 | திட்டமிடல் உதவியாளர் | 01 | 01 |
| 06 | ஆராய்ச்சி உதவியாளர் | 02 | 01 |
| 07 | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 |
| 08 | முகாமைத்துவ உதவியாளர் | 06 | 05 |
| 09 | காரியாலய தொழில் உதவியாளர் | 06 | 06 |
| 10 | சாரதி | 04 | 04 |
| ***மொத்தம்*** | | ***31*** | ***27*** |

## 3.2 பணியாளர்களின் தகவல்கள்

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலை நகல் | மின் அஞ்சல் |
| திரு. ஏ. எம். பீ. எம். பீ. அத்தபத்து | பணிப்பாளர் நாயகம் | 2484542 | 2394908 | dgdf@dfd.treasury.gov.lk<br>atapattu@dfd.treasury.gov.lk |
| செல்வி சீ. எஸ். பெரேரா (05.05.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | பணிப்பாளர் | 2484572 | 2484955 | christinep@dfd.treasury.gov.lk |
| செல்வி ஏ. எச். எஸ். பரீதா (05.05.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | பணிப்பாளர் | 2484595 | 2484955 | fareedah@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம். கே. டீ.என். மாதம்பே | பணிப்பாளர் | 2484605 | 2484955 | nilukad@dfd.treasury.gov.lk |
| திரு. பீ. எம். கே. ஹெட்டியாரச்சி | பணிப்பாளர் | 2484572 | 2484955 | manjulap@dfd.treasury.gov.lk |
| திரு. ஓ. எம். ஜாபீர் (08.01.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | பணிப்பாளர் | 2484507 | 2484955 | mjabeer@dfd.treasury.gov.lk |
| திரு. எச். எச். வீ. குமார (06.05.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | பணிப்பாளர் | 2484595 | 2484955 | hemanthak@dfd.treasury.gov.lk |
| திருமதி. டப்ளியூ. எல். எம். ஏ. லியனஹே | கணக்காளர் | 2484596 | 2484955 | liyanagem@dfd.treasury.gov.lk<br>manorigl@yahoo.com |
| செல்வி. ஆர்ஏ. டீ. ஆர். ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் | 2484596 | 2484955 | ranithad@dfd.treasury.gov.lk<br>radranitha@gmail.com |
| செல்வி. ஜே. டீ. கொடின்கடுவை | உதவிப் பணிப்பாளர் | 2484854 | 2484955 | dilrukshij@dfd.treasury.gov.lk<br>jdilkotinkaduwa@yahoo.com |
| செல்வி. திலுமி டப்ளியூ. குமாரகுரு | உதவிப் பணிப்பாளர் | 2484501 | 2484955 | dilumiw@dfd.treasury.gov.lk |
| திரு. எச். பீ. எஸ். சாந்த | திட்டமிடல் உதவியாளர் | 2484884 | 2484955 | shantha@dfd.treasury.gov.lk |
| செல்வி ஏ. எம். விக்ரமசிங்க | ஆராய்ச்சி உதவியாளர் | 2484884 | 2484955 | amanthiw@dfd.treasury.gov.lk<br>amanthi1974@ yahoo.com |
| திருமதி. பீ. எச். எஸ். சமரவிக்ரம | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திருமதி. திலந்தி ஹேவாவசம் | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திருமதி. எச். ஏ. டீ. ஏ. நிலந்தி | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திரு. ஆர். கே. லெனோரா (03.01.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |
| திரு. எச். எச். எச். எம். டப்ளியூ. கே. செனெவிரத்ன (26.11.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | - |

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலை நகல் | தொலை அஞ்சல் |
| செல்வி ஜே. எம். ஐ. ஏ. கீஷானி | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளா | 2484884 | 2484955 | - |
| திரு. எம். என். எல். பிரேமதிலக | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எச். பீ. ஆர். சமரசிங்க (05.05.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. ஜீ. ஏ. குமாரசிரி | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. டீ. கீர்த்திரத்ன (17.06.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எஸ். ஏ. கீர்த்திசேன (05.05.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. ஆர். பீ. ஜெ. ஹன்டன் (11.07.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே. டீ. டீ. குணசேகர (24.07.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. குணவர்தன (13.06.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. பீ. எச். சு. எச். த சிள்வா (13.08.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டாா) | சாரதி | 2484855 | 2484955 | - |
| திருமதி ஜே. ஏ. எச். சீ. கே. ஜயசிங்க (03.01.2014 ஆம் திகதி இட மாற்றம் செய்யப்பட்டார்) | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஆர். ஏம். குலதுங்க | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. கே. பீ. ஐ. சமிந்த | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே. எம். டீ. ஜே. எச். ஹேமந்த | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| ஜயசிங்க (29.01.2014 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) | காரியாலய உதவியாளர் | 2484855 | 2484955 | - |

### 3.3 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| திருமதி. திலன்தி ஹேவாவசம் முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ உதவியாளர்களின் நடைமுறைகளும் பொறுப்புக்களும் | 24.07.2014 (ஒரு நாள்) | திறன் அபிவிருத்தி நிதியம் |
| | ஈ அரச மற்றும் தகவல் தொழிநுட்ப முகாமைத்நுவ நடைமுறைகள் | 24.09.2014-25.09.2014 | திறன் அபிவிருத்தி நிதியம் |
| திரு. ஆர். கே. லெனோரா முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ உதவியாளர்களின் நடைமுறைகளும் பொறுப்புக்களும் | 24.07.2014 (ஒரு நாள்) | திறன் அபிவிருத்தி நிதியம் |
| | களஞ்சிய சாளை நடைமுறைகள் பற்றிய பட்டறை | 29.08.2014-07.11.2014 | நிர்மாணஉபகரணப் பயிற்சிநிலையம் |

### 3.4 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| திரு. ஏ. எம். பீ. எம். பீ. அதபத்து<br>பணிப்பாளர் நாயகம் | 18 வது சார்க் அமைப்பின் பணிப்பாளர் சபைக் கூட்டம் | 28.04.2014-30.04.2014 | வங்காளதேசம் |
| | 19 வது சார்க் அமைப்பின் பணிப்பாளர் சபைக் கூட்டம் | 06.08.2014-08.08.2014 | பாகிசஸ்தான் |
| திரு. ஓ. எம். ஜாபீர்<br>பணிப்பாளர் | நிலைபேறுடைய பொருளாதார தத்துவத்தின் அடிப்படையில் ஆரம்ப மட்ட பொருளாதார அபிவிருத்தி | 20.10.2014-21.11.2014 | தாய்லாந்து |
| திரு. எச். எச். வீ. குமார<br>பணிப்பாளர் | அரிசி பதனிடல் தொடர்பான ஆசிய பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளல் | 16.09.2014-19.09.2014 | தாய்லாந்து |
| திருமதி. டப்ளியூ. எல். எம். ஏ. லியனகே<br>கணக்காளர் | SME நிதியீடு – கற்கைப் பயணம் | 18.09.2014-19.09.2014 | மலேஷியா |
| | பொதுத் துறைக் கணக்கீடு | 29.09.2014-30.09.2014 | இந்தோனேசியா |
| செல்வி. ஆர். ஏ. டீ. ஆர். ரணசிங்க<br>உதவிப் பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தி பற்றிய பட்டப்பின் டிப்ளோமா | 14.01.2013-31.07.2014 | அவுஸ்திரேலியா |
| செல்வி. ஜே. டீ. கொடின்கடுவை<br>உதவிப் பணிப்பாளர் | 2013 ஆம் ஆண்டு அறிவுப் பங்கீடு - இலங்கை இடைக்கால அறிக்கை | 20.01.2014-25.01.2014 | கொரியா |
| | பிராந்திய அபிவிருத்திக் கொள்கை | 17.08.2014-30.08.2014 | கொரியா |
| செல்வி. திலுமி டப்ளியூ. குமாரகுரு<br>உதவிப் பணிப்பாளர் | SME, நிதியீடு – கற்கைப் பயணம் | 18.09.2014-19.09.2014 | மலேஷியா |
| | SME, போட்டி மற்றும் சந்தை, பங்கேற்பு பற்றிய இந்திய அனுபவத்தை அபிவிருத்தியடைந்த அடையும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளல் | 24.11.2014-05.12.2014 | இந்தியா |
| திரு. எச். பீ. எஸ். சாந்த<br>திட்டமிடல் உதவியாளர் | தரவு, சேகரித்தல், சுருக்குதல், தொகுத்தல் பற்றிய பயிற்சி | 25.06.2014-22.07.2014 | சீனா |
| செல்வி ஜே. எம். ஐ. ஏ. கீஷானி<br>தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | பொதுத் துறையின் தகவல் தொழினுட்ப முகாமைத்துவம் | 14.08.2014-05.09.2014 | மலேஷியா |

## 4. நிதி தொடர்பான தகவல்கள்

| செலவு விபரம் | மதிப்பீடு | உள்ள படி |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **575,889,680** | **463,357,391** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 13,755,000 | 13,516,952 |
| பிரயாணச் செலவுகள் | 1,647,000 | 1,574,093 |
| வழங்கல்கள் | 2,221,100 | 2,218,708 |
| பராமரிப்புச் செலவினம் | 1,613,000 | 1,585,673 |
| சேவைகள் | 1,844,680 | 1,679,837 |
| மானியக் கொடுப்பனவுகள் | 553,000,000 | 441,553,084 |
| ஏனைய மீண்டு வரும் செலவினம்- மாற்றல்கள் | 1,808,900 | 1,229,044 |
| **மூலதனச் செலவினம்** | **7,388,161,020** | **6,841,134,709** |
| மூலதனச் சொத்துக்களைப் பற்றுதல் | 240,000 | 0 |
| கொள் திறன் அபிவிருத்தி | 805,320 | 805,307 |
| ஏனைய மூலதனச் செலவினம் | 5,239,725,700 | 4,992,464,075 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேமபடுத்துவதற்கான வசதியளிப்புக் கருத்திட்டம் (இ.அரசு / உ.வ) | 1,612,000,000 | 1,355,309,974 |
| சிறிய நடுத்தர தொழில் துறையினை மேம்படுத்ததல் (இ.அரசு / ஜீடிஇஸட்) | 272,134,650 | 271,691,422 |
| உலக உனவு நெருக்கடி பொறுப்பு நிகழ்ச்சித் திட்டம் (இ.அரசு / உ.வ) | 263,255,350 | 220,863,931 |
| **மொத்தம்** | **7,964,050,700** | **7,304,492,100** |